Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.எம்.கணேசன், பி.எஸ்.சி.,எம்.பி.ஏ.,

ந.க.எண்:2772/2024/எப்-1, நாள்: 06.09.2024.

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – பொள்ளாச்சி நகராட்சி – டவுன் சர்வே வார்டு எண்:B, பிளாக் எண்:12-ல், நகரளவு எண்:742/5 மற்றும் 743/7-ல் 4018.70 சதுர மீட்டர்(0.993 ஏக்கர்) பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அனுமதி வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. திரு.கி.உமாசங்கர் என்பவரது விண்ணப்பம், நாள்.14.05.2024 மற்றும் 06.09.2024.
2. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம், CBE/REGN/20VH5NLQ/2024/2024/TCP, நாள்:19.03.2024.
3. தாணப் பத்திரம் எண்:3091, நாள்:12.03.2024.
4. நகராட்சிப் பொறியாளர் அவர்களின் குறிப்பு, நாள்:27.08.2024.
5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு, நாள்:26.07.2024 மற்றும் 04.09.2024.
6. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்: 12843/2022/டிபி-2, நாள்.20.10.2022.
7. இந்நகரமன்றத் தீர்மானம், 1161, நாள்:30.08.2024.
8. நகரமைப்பு ஆய்வரின் குறிப்பு, நாள்:04.09.2024.

உத்தரவு:

பார்வை 1-ல் காணும் திரு.K.உமாசங்கர் என்பவரின் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி வழங்க கோரிய விண்ணப்பத்தின் அடிப்படையில், பொள்ளாச்சி நகராட்சி டவுன் சர்வே வார்டு எண்:B, பிளாக் எண்:12-ல், நகரளவு எண்:742/5 மற்றும் 743/7-ல் 4018.70 சதுர மீட்டர்(0.993 ஏக்கர்) பரப்பளவில், இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களின் ம.வ/(கோ.மா) எண்:84/2024, நாள்:19.03.2024-ன்படி, பார்வை 2-ல் காணும் கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, சாலைகள், பொது உபயோக மற்றும் TANGEDCO-க்கு ஒதுக்கப்பட்டுள்ள தானப்பத்திரம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பார்வை 4-ல் காணும் நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பில் மனைப்பிரிவில் உரிய அபிவிருத்தி பணிகள், தெருவிளக்கு வசதி மற்றும் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

பார்வை 5-ல் காணும் அறிவிப்புகளில், மனைப்பிரிவு அனுமதிக்கான Stability Certificate மற்றும் உரிய கட்டணங்களை செலுத்தி ரசீதுடன் மீள சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. மனைப்பிரிவு அங்கீகாரத்திற்குரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டு, அதன் ரசீது நகல், கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளதன் புகைப்பட நகல், Professor & Head – Department of Civil Engineering, Dr.Mahalingam College of Engineering & Technology பொள்ளாச்சி அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மனைப்பிரிவிலுள்ள அனைத்து மனையிடங்களுக்கும் காலியிடவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அனுமதி வழங்க, பார்வை 7-ல் காணும் நகரமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில், 2019 தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் பிரிவு 47-ன்படியும், நடைமுறை விதிகளுக்கு ஏற்ப நிபந்தனைகளுக்கு உட்படுத்தியும், பார்வை 8-ல் காணும் நகரமைப்பு ஆய்வரின் குறிப்பின்படியும், மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இதன் மூலம் அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு:

மனைப்பிரிவு வரைபடம்

மற்றும் நிபந்தனைகள்.

ஆணையாளர்(ப.பொ)

பொள்ளாச்சி நகராட்சி

பெறுநர் :

திரு.கி.உமாசங்கர்,

த/பெ.B.கிருஷ்ணசாமிக் கவுண்டர்.

231, மரப்பேட்டை வீதி,

பொள்ளாச்சி.

நகல்:

1. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோவை அவர்களின் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. பொறியியல் பிரிவு/வருவாய் பிரிவு/நகரமைப்பு பிரிவு – தக்க நடவடிக்கைக்கு.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate